**பல்லவபுரம் நகராட்சி மன்ற கூட்டம் எண் 06/2018–19 நகராட்சி ஆணையாளர் அறையில் 29.06.2018 அன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்:–**

**முன்னிலை :– க.சிவகுமார் எம்.ஏ.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## பொருள் எண் – 1

பல்லவபுரம் நகராட்சி ஆணையாளர் திரு.க.சிவகுமார், எம்.ஏ., அவர்களின் ஜீன் 2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் எண் – 2

பல்லவபுரம் நகராட்சி பொறியாளர் திரு.எம்.கருப்பையா ராஜா அவர்களின் ஜீன் 2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் எண் – 3

பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குள் ஜீன் 2018 நிகழ்ந்த பிறப்பு மற்றும் இறப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பிறப்பு | – | 140 எண்ணிக்கை |
| இறப்பு | – | 19 எண்ணிக்கை |

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் எண் – 4

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் AMRUT திட்டத்தின் கீழ் வார்டு எண்.9, அன்சா சித்ரா குடியிருப்பு, வார்டு எண்.13 சுபம் நகர் பகுதி I, வார்டு எண்.17 AGS நகர் ஆகிய இடங்களில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளது. பூங்காக்கள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதால் காவலர்கள், தோட்டக்காரர்கள் வைத்து பராமரிக்க 10.03.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி திரு.M.பாஸ்கரன் நர்சரி நிறுவனத்திற்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.182, நாள்.31.03.2017ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது இரண்டாம் ஆண்டு பராமரிப்பு பணிகள் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை ஒரு ஆண்டிற்கு ரூ.8.00/- இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று திரு.M.பாஸ்கரன் நர்சரி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவீனம் பொது நிதி அல்லது OSR நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 5

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19, மணிகண்டன் தெருவில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளது. மேற்படி, இடத்தில் மழைநீர் தேங்காமல் இலகுவாக செல்லவும் அத்தெருவில் மழைநீர் வடிகால் சீரமைக்க ஆகும் தோராய மதிப்பீடு ரூ.9.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 6

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் மூலம் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி இரண்டு வாரியத்திடம் இருந்து பெறப்படும் தண்ணீரின் அளவுகளை கண்டறிந்து அதற்குண்டான தொகையினை செலுத்த வேண்டியுள்ளளால் தண்ணீர் பெறப்படும் நீரேற்று நிலையங்களில் டிஜிட்டல் தொழில்நுட்பம் கொண்ட 3 எண்கள் அளவுமானி பொருத்திட அதற்காகும் மதிப்பீட்டு தொகை ரூ.9.70/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 7

பல்லவபுரம் பெருநகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமாக 12 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் பராமரிப்பில் உள்ளது. இந்த நீர்தேக்க தொட்டிகளில் வாயிலாக ஆங்காங்கு வால்வுகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த வால்வுகள் அமைந்துள்ள இடங்கள் சாலையோரம் அமைந்துள்ளதால் வாகன போக்குவரத்து காரணமாக வால்வுகள் சேதமடைகின்றது. இதனால் வால்வுகளை பாதுகாக்கும் பொருட்டு அதனை சுற்றி வால்வு பிட் அமைக்க அதற்காகும் தோராய செலவினம் ரூ.9.80/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 8

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.6ல் நமது நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்தேக்க தொட்டி உள்ளது. இந்த மேல்நிலை தொட்டி கட்டி பல ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் இதனை பராமரிப்பது அவசியமாதலால் இத்தொட்டியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அதற்காகும் தோராய செலவினம் ரூ.5.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 9

பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2018–19ம் ஆண்டு முதிர் கொசு தடுப்பு நடவடிக்கை பணிகளுக்காக புகை மருந்து தெளிக்கும் பணிக்கு Vehicle Mounted Fogging Machine 2, False Fogging Machine 7, and Hand Fogging Machine 20 ஆகியவற்றிற்கு பழுது மற்றும் புதுப்பித்தல் பணிக்கு 19.06.2018 ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | பவானியம்மன் எண்டர்பிரைசஸ், 1, 3வது தெரு, அன்னை சத்யா நகர், நெசபாக்கம், சென்னை 78 | கார்த்திகா சிஸ்டம் இன்ஞ்னியரிங், டி–191, கட்டபொம்மன் தெரு, பாரி நகர், அசோக் நகர், சென்னை 83 |
|---|---|---|---|
| | **Mega Fogging Machine** | | |
| 1 | Hot Bulb | 14800 | 12800 |
| 2 | Banjo | 6500 | 5500 |
| 3 | Diabram | 900 | 700 |
| 4 | N.R.V. | 900 | 700 |
| 5 | Petrol Tank Cap | 90 | 70 |
| 6 | Air Pumb | 9700 | 7800 |
| 7 | Chemical Noser | 3600 | 2500 |
| 8 | Panel Box | 7500 | 6500 |
| 9 | Hand Pump | 6600 | 5600 |
| 10 | Spark Pulg | 100 | 80 |
| 11 | Petrol Jet | 5500 | 4500 |
| 12 | Carborator | 4700 | 3500 |
| 13 | Tuflon Tube | 900 | 700 |
| 14 | Out Cover | | |

| | | | |
|---|---|---|---|
| 15 | Engine Pad | 5200 | 3200 |
| 16 | Egnition Coil | 9300 | 7500 |
| 17 | Generator Service | 3700 | 2500 |
| 18 | Compressor Service | 9800 | 7600 |
| 19 | Labour Charges for each visit | 3500<br>3700 | 3000<br>2500 |
| | **Portable Fogging Machine** | | |
| 1 | Panel Box | 4000 | 3000 |
| 2 | Hot Bulb | 6000 | 5000 |
| 3 | Spark Plug | 100 | 60 |
| 4 | Petrol Jet | 4700 | 4000 |
| 5 | Chemical Nozel | 5000 | 4000 |
| 6 | Ignition Coil | 2500 | 2000 |
| 7 | Out Cover | 3000 | 2500 |
| 8 | Tufflon Tube | 500 | 300 |
| 9 | Petrol Tank Cap | 100 | 40 |
| 10 | N.R.V. | 500 | 400 |
| 11 | Diapuram | 400 | 200 |
| 12 | Hand Pump | 7000 | 5000 |
| 13 | Service Charge / Labour Charges for each visit | 2000 | 1000 |
| | **Hand Fogging Machine** | | |
| 1 | Burner | 5000 | 4000 |
| 2 | Coil | 7000 | 5000 |
| 3 | Labour & Service for each visit | 2000 | 1000 |

**அலுவலக குறிப்பு**

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண் 2, கார்த்திகா சிஸ்டம் இன்ஞ்னியரிங், சென்னை 83, என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு அளிக்கலாம்.

ந.க.எண் 3988/2018/எச்1

## பொருள் எண் – 10

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2016-17, 2017-18 ஆம் நிதியாண்டில் 34 எண்ணிக்கைகள் இணைப்பில் கண்டுள்ளபடி குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு, தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரமானது அதிக பொருட் செலவில் அமைக்கப்பட்டுள்ளதாலும், பொது மக்களின் தொடர்ச்சியான பயன்பாட்டில் உள்ளதாலும், இதில் குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் தொடர் பராமரிப்பில் இருக்கவேண்டியது அவசியமாகிறது. எனவே, இவ்வியந்திரங்களை ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள கீழ்காணும் விவரப்படி மதிப்பீடுகள் தயார் செய்து பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | பகுதி | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1. | குரோம்பேட்டை பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிக்கும் 250 LPH மற்றும் 500 LPH இயந்திரங்கள் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.80 |
| 2. | பல்லாவரம் பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிக்கும் 250 LPH மற்றும் 500 LPH இயந்திரங்கள் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 9.80 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 11

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல், அஸ்தினாபுரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி இயங்கி வருகின்றது. இப்பள்ளியில் மாற்று எரிசக்தி மூலம் மின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு சூரிய ஒளியில் இருந்து மின் உற்பத்தி செய்து பயன்படுத்தும் வகையில் 25 கிலோ வாட் திறன் கொண்ட பேனல் பொருத்தப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இப்பள்ளியில் நகராட்சியால் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. எனவே, ஏற்கனவே அமைந்துள்ள மின் உற்பத்தி பேனல் போர்டை மாற்றி புதிய கட்டிடத்தின் மேல்தளத்தில் அமைக்க ஆகும் தோராய மதிப்பீடு ரூ.6.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 12

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19ல் சரஸ்வதி காலனி மற்றும் மணிகண்டன் நகர் பகுதியில் AMRUT 2016-17ம் ஆண்டு திட்டத்தில் சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்த பூங்காவினை பராமரிக்க தனியார் ஒப்பந்ததாரர் மூலம் ஆண்டு பராமரிப்பு செய்திட அதற்காகும் மதிப்பீட்டு தொகை ரூ.9.90/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதி அல்லது OSR நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.847/2017/இ1

## பொருள் எண் – 13

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.33ல் கஜலட்சுமி நகர் பகுதியில், சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பூங்காவில் புல்வெளிகளும், செடிகளும் நடைபாதையை ஒட்டி அமைந்துள்ளன. நடைபாதையில் செல்லும் சிறுவர்கள் புல்வெளி அமைந்துள்ள பகுதியில் இறங்கி விளையாடுவதால் புல்வெளி பாழடைவதுடன் அவற்றை பாராமரிப்பது சிரமமாகின்றது. எனவே பூங்காவில் உள்ள புள்வெளியினை பாதுகாக்கும் பொருட்டு துறுப்பிடிக்காத ஸ்டெயின்லெஸ்டில் தடுப்பான்கள் அமைப்பதற்கும், வயதான முதியவர்கள் வந்து அமர கூடுதலாக கருங்கல் நாற்காலி அமைப்பதற்கும், தோராய திட்ட மதிப்பீடு ரூ. 2.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதி அல்லது OSR நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.847/2017/இ1

## பொருள் எண் – 14

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19, சரஸ்வதி காலனி பகுதியில் AMRUT 2016-17ம் ஆண்டு திட்டத்தின் கீழ் சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இப்பூங்காவில் பசுமை புல்வெளிகள் மற்றும் செடிகளை பராமரிக்க தண்ணீர் வசதி ஏற்படுத்த மதிப்பீட்டில் வழிவகை இல்லாத காரணத்தால் இவைகளை பராமரிக்க ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தவும் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான தோராய மதிப்பீடு ரூ.6.50/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதி அல்லது OSR நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.847/2017/இ1

## பொருள் எண் – 15

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.36, நல்லப்பா தெருவில் சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு திடல் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இப்பூங்காவில் பசுமை புல்வெளிகளும், செடி கொடிகளும் உள்ளன. இவற்றை பசுமையாக பராமரிக்க தற்சமயம் இப்பூங்காவில் உள்ள ஆழ்துளை கிணற்றினை பிளமிங் செய்து பராமரிக்கவும், தண்ணீர் தெளிக்க, குடிநீர் பணிகள் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.40,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதி அல்லது OSR நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.847/2017/இ1

## பொருள் எண் – 16

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைக்காக 21 இடங்களில் பசுமை உரக்குடில் அமைக்கப்பட்டு பொது மக்களிடம் பெறப்படும் திடக்கழிவுகளிலிருந்து மக்கும் கழிவுகள் பிரித்தெடுத்து உரமாக மாற்றப்படுகிறது. மேற்படி, பெறப்படும் மக்கும் கழிவுகள் போக மீதம் உள்ள பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் கழிவுகள் அதிக அளவில் தற்போது தேக்கமடைகின்றது. அதுமட்டும் அல்லாது அதிக அளவு இட வசதியும் தேவைப்படுகிறது. இந்த பிளாஸ்டிக் கழிவுகளை இயந்திரம் மூலம் அதிகம் அழுத்தம் கொடுத்து பேக்கிங் செய்து வெளியிடங்களுக்கு எளிதில் கொண்டு செல்லும் வகையில் தயார் செய்யும் தானியங்கி பண்டல் போடும் (AUTOMATIC BALING PRESS WITH AUTO BALE TILE) இயந்திரம் வாங்க அதற்காகும் தோராய திட்ட மதிப்பீடு ரூ.7.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் தூய்மை இந்தியா திட்ட நிதி அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1621/2018/இ1

## பொருள் எண் – 17

பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கட்டளை பேருந்து நிலையத்தில் சிறுநீர் கழிப்பிடம் மற்றும் பி.வி.வைத்தியலிங்கம் சாலையில் பேருந்து நிழற்குடை அமைத்தல் பணியினை தன்னார்வு திட்டத்தின் கீழ் மற்றும் கார்பரேட் நிறுவனங்களின் சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதியில் (CSR Fund) நகராட்சி சட்ட விதிகளின்படி M/s லயன் கிளப் இன்டர்னேஷனல் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. (CSR Fund) கார்பரேட் நிறுவனங்களின் சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதியில் தன்னார்வு நிறுவனம் M/s லயன் கிளப் இன்டர்னேஷனல் மூலம் பணியினை மேற்கொள்ளலாம்.
3. அரசு சட்ட திட்டங்களுக்குட்பட்டு தமிழ்நாடு நகராட்சி விதிகளின்படி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4112/2018/இ1

## பொருள் எண் – 18

பல்லவபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 2018–19 ஆண்டுக்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் வாங்குவதற்கு 22.06.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஒரு லிட்டர் (விலை விகிதம்) |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பிளாஸ்டோ டெக்.,<br>31/1, 6வது பிரதான சாலை,<br>திருமுடிவாக்கம்,<br>சென்னை – 44 | ரூ.2950/– |
| 2 | சிவம் டிரேடர்ஸ்,<br>எண் 406, 200 அடி சாலை,<br>முகப்பேர், சென்னை – 95 | ரூ.2800/– |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண் 2ல் உள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கலாம்.

ந.க.எண் 3987/2018/எச்1

## பொருள் எண் – 19

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 430 கைப்பம்புகள் அமைக்கப்பட்டு ஆண்டு பராமரிப்புக்கென ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தனியார் (Outsourcing) மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி, கைப்பம்புகளை பராமரிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.9.80/- இலட்சத்திற்கு 30.06.2016 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே திரு.K.ஆதிகேசவலு அளித்த அதே ஒப்பந்த விலைவிகிதத்தில் 01.07.2018 முதல் 30.06.2019 வரை ஒரு ஆண்டுக்கு பணி நீட்டிப்பு செய்து ஆண்டு பராமரிப்பு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 20

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8, சுந்தரேசன் தெருவில் அமைந்துள்ள சுகாரதார பிரிவு வார்டு அலுவலகத்தில் கேட் அமைத்து மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.50/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 21

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, சுபம் நகர் பகுதி IIIல் AMRUT திட்டத்தின் கீழ் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அப்பூங்காவில் பெயர் பலகை ஒன்று, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு, சுவர்களில் கலை ஒவியங்கள் மற்றும் இரண்டு சிறுபாலங்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பிடு ரூ.6.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் பொது நிதி அல்லது OSR நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 22

பல்லவபுரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, சுபம் நகர் பகுதி IIIல் AMRUT திட்டத்தின் கீழ் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. அப்பூங்காவில் யோகா கூடம், குழந்தைகள் விளையாட்டு பகுதி, 8 வடிவ நடைபாதையை சுற்றிலும் Stainless Steel Link அமைக்கவும், பணியினை மேற்கொள்ளவும் ஆகும் தோராய செலவினம் ரூ.9.75/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் பொது நிதி அல்லது OSR நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 23

இந்நகராட்சியில் ஆணையாளரை பிரதிவாதியாக்கி தொடரப்படும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக வழக்கை ஏற்று நடத்திதரும் வழக்கறிஞர்களுக்கான வழக்கு கட்டணம் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கான கட்டணமாக 2018–2019 ம் ஆண்டிற்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கு கட்டணமாக ரூ.5.00 இலட்சமும் மாவட்ட நீதி மன்ற வழக்குகள் கட்டணமாக ரூ.3.00 இலட்சமும் மன்ற அனுமதிக்கு வைக்கபடுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

வழக்கறிஞர்கள் கட்டணம் ரூ.8.00 (எட்டு லட்சத்திற்கு) ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம் .

ந.க. எண்.4943/2018/எப்1

## பொருள் எண் – 24

பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மொத்தம் 42 வார்டுகள் உள்ளது. இதில் தினசரி 104 MT திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றது. இதில் மக்கும் குப்பை 50% ஆகும். மீதம் உள்ள 50% விற்பனைக்கு உள்ள உலர் கழிவுகள் 10%ம் எரியூட்ட தகுதியான கழிவுகள் 30%ம் மீதம் உள்ள 10 % கல், மண், கண்ணாடி, பீங்கான் கழிவுகள் ஆகும். இதில் எரியூட்ட தகுதியான Combusitble Waste யை 30% யை அரியலூர் ரெட்டிபாளையத்தில் உள்ள Ultra Tech Cement Ltd யின் ஒப்பந்த அடிப்படையில் Combusitble Waste யை அனுப்புவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளோம். ஏனவே இந்த எரியூட்ட தகுதியான உலர் கழிவுகளை அரியலூர் Ultra Tech Cement Ltd க்கு அனுப்புவதற்கு தனியார் மூலம் வாகனம் வைத்து Combusitble Waste யை அனுப்புவதற்கு மன்ற அனுமதிக்கு வைவககப்படுகின்றது. உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம்.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் 6643/2018/எச்1

## பொருள் எண் – 25

பல்லவபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28, பெரியார் நகர் பகுதியில் நகராட்சியின் மூலம் நாய்கள் கருத்தடை மையம் இயங்கி வருகிறது. மேற்கண்ட மையத்தினை இன்டர்நேஷனல் டிரஸ்ட் ஆப் பீஸ் நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது கருத்தடை மையத்தில் உள்ள கழிவறை சுவர் உடைப்பு சரி செய்யவும் மற்றும் குளிர்சாதன பெட்டி (Fridge) மற்றும் குளிர்சாதன இயந்திரம் (AC) வாங்கி பொருத்திடும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.2.00/- இலட்சத்திற்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நிர்வாக அனுமதி வேண்டி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பணியின் அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 26

பல்லவபுரம் பெரு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் நகராட்சி மற்றும் அரசு சார்ந்த 11 பள்ளிகள் இயங்கிவருகிறது. இப்பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகங்களை குழந்தைகளின் சுகாதாரம் கருதியும், சுத்தமாக பராமரிக்கவும், அதனை நடைமுறைப்படுத்த அரசாணையில் தெரிவித்துள்ள உரிய வழிக்காட்டுதல்களின் படி கீழ்கண்ட நகராட்சிகளின் பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் உள்ள கழிவறைகள், வளாகங்கள் மற்றும் அறைகள் ஆகிய இடங்களில் தினதோறும் சுத்தம் செய்து, பராமரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள 27.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சம்) | ஒப்பந்ததாரரின் பெயர் (ம) ஒப்பந்தப்புள்ளி தொகை | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் (ம) தொகை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி துவக்கப்பள்ளி, பல்லாவரம் | 7.52 | P.திருமலாதேவி ரூ.62,660/- R.ஜெயசித்ரா ரூ.67,660/- | P.திருமலாதேவி ரூ.62,660/- |
| 2 | மறைமலையடிகளார் மேல்நிலைப் பள்ளி, பல்லாவரம் | 7.10 | P.திருமலாதேவி ரூ.59,160/- R.ஜெயசித்ரா ரூ.72,660/- | P.திருமலாதேவி ரூ.59,160/- |
| 3 | நகராட்சி நடுநிலைப் பள்ளி, கீழ்கட்டளை | 6.00 | P.திருமலாதேவி ரூ.49,995/- R.ஜெயசித்ரா ரூ.77,600/- | P.திருமலாதேவி ரூ.49,995/- |
| 4 | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, குரோம்பேட்டை | 8.00 | P.திருமலாதேவி ரூ.66,660/- R.ஜெயசித்ரா ரூ.69,750/- | P.திருமலாதேவி ரூ.66,660/- |
| 5 | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, குரோம்பேட்டை | 9.75 | P.திருமலாதேவி ரூ.81,245/- R.ஜெயசித்ரா ரூ.84,000/- | P.திருமலாதேவி ரூ.81,245/- |
| 6 | நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி, அஸ்தினாபுரம் | 6.40 | P.திருமலாதேவி ரூ.53,330/- S.ரமணி ரூ.53,335/- | P.திருமலாதேவி ரூ.53,330/- |
| 7 | நகராட்சி துவக்கப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி, ஜமீன் இராயப்பேட்டை | 6.90 | P.திருமலாதேவி ரூ.57,495/- S.ரமணி ரூ.57,500/- | P.திருமலாதேவி ரூ.57,495/- |
| 8 | நகராட்சி துவக்கப் பள்ளி, பென்னியம்மன் கோவில் தெரு | 6.70 | P.திருமலாதேவி ரூ.55,825/- S.ரமணி ரூ.55,835/- | P.திருமலாதேவி ரூ.55,825/- |
| 9 | நகராட்சி மேல்நிலைப் பள்ளி, பொன்னியம்மன் கோவில் தெரு | 6.30 | P.திருமலாதேவி ரூ.52,495/- | P.திருமலாதேவி ரூ.52,495/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | S.ரமணி<br>ரூ.52,500/– | |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்காணும் பணிகளுக்க வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினங்களை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண் 3681/2018/எச்1

## பொருள் எண் – 27

பல்லவபுரம் பெரு நகராட்சியில் 2018–19ம் ஆண்டுக்கு கொசு ஒழிப்பு தொற்று நோய்கள், அறிவிக்கைகள் போன்றவைகளுக்காக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தேவையான துண்டு பிரசுரங்கள் மற்றும் பிளக்ஸ் பேனர்கள் ஆகியவைகள் தயாரித்து வழங்க 29.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒரு படிவம் | Vellore Stationaries & Printing Service Industrial Co-Op Society Ltd., | Arumbakkam Stationaries & Printing Service Industrial Co-Op Society Ltd., |
|---|---|---|---|---|
| 1 | DBC தினசரி ஆய்வு படிவம் | 1 | ரூ. 4.50 | ரூ. 4.48 |
| 2 | முதல் நிலை மேற்பார்வையாளர் அறிக்கை படிவம் | 1 | ரூ. 5.10 | ரூ. 5.04 |
| 3 | இரண்டாம் நிலை மேற்பார்வையர் அறிக்கை படிவம் | 1 | ரூ. 5.10 | ரூ. 5.04 |
| 4 | மண்டல அலுவலர் (Super Check) மேற்பார்வையர் அறிக்கை படிவம் | 1 | ரூ. 5.10 | ரூ. 5.04 |
| 5 | பூச்சியியல் குறியீடு படிவம் | 1 | ரூ. 5.10 | ரூ. 5.04 |
| 6 | மல்டி கலர் ஸ்டிக்கர் வீடுகளில் ஒட்ட (A4 size) | 1 | ரூ. 18.00 | ரூ. 17.70 |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள Arumbakkam Stationaries & Printing Service Industrial Co-Op Society Ltd., Chennai 106 என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கலாம்.

ந.க.எண் 3128/2018/எச்1

## பொருள் எண் – 28

பல்லவபுரம் பெரு நகராட்சியில் 1970ம் ஆண்டு முதல் பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகளில் உள்ள பதிவுகளை கணிணியில் பதிவேற்றம் செய்ய 29.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | ஒரு பதிவு செய்ய (விலை விகிதம்) |
|---|---|---|
| 1 | Sri Data Solution<br>8/23, Bharathidasan Street,<br>Irumbuliyur,<br>Chennai – 45 | ரூ.8/– |
| 2 | Incom Solutions,<br>16, Perumal Koil Street,<br>Irumbuliyur, Chennai – 45 | ரூ.11/– |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் அளித்துள்ள வரிசை எண் 1ல் உள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கலாம்.

ந.க.எண் 4140/2018/எச்1

## பொருள் எண் – 29

பல்லவபுரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 2017–18ம் ஆண்டு டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பொருட்டு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (DBC) அமர்த்திக்கொள்ள 30.06.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் M/s. தீப்தி எண்டர்பிரைசஸ் நிறுவனம் குறைந்த விலை விகிதம் வழங்கியதன் பேரில் கூட்டப்பொருள் எண்.295 நாள்.31.08.2017ல் மற்றும் கூட்டப்பொருள் எண்.430, நாள்.08.12.2017ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி காலம் 11.07.2017 முதல் 10.07.2018 வரை ஓராண்டு காலம் முடிவடைவதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர், பொது சுகாதார இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களின் அறிவுரையின்படி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் நகரின் அனைத்து பகுதிகளிலும் உள்ள குடியிருப்புகள், அடுக்குமாடி குடியிருப்புகள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் வழிபாட்டு தளங்கள் ஆகிய இடங்களை கண்காணிக்கவும், பொது சுகாதார பணிகள் அத்தியவசியப்பணி என்பதால் தொடர்ந்து பணியாளர்கள் அமர்த்தி, ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் விலைவிகிதத்திலேயே பணி மேற்கொள்ள 11.07.2018 முதல் 31.12.2018 வரை கால நீட்டிப்பு செய்யவும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினம் பொது நிதியில் ஏற்கலாம்.
   ந.க.எண். 3439/2017/எச்1\

**பல்லவபுரம் நகராட்சி மன்ற கூட்டம் எண் 05/2018–19 நகராட்சி ஆணையாளர் அறையில் 27.06.2018 அன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்ற அவசர கூட்டத்தின் நடவடிக்கைகள்:–**

**முன்னிலை :– க.சிவகுமார் எம்.ஏ.,**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## பொருள் எண் – 1

பல்லவபுரம் நகராட்சியில் பணிகள் மேற்கொண்டதில் ஒப்பந்ததாரர் சாய் எண்டர்பிரைசஸ் 2012 – 2013, 2013 – 2014, ஆண்டுகளுக்கான பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட EMD, ASD, தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படி வைப்பு நிதி தொகையினை வழங்க மூன்றாண்டு காலத்திற்கு மேல் ஆகிவிட்டது. சாய் எண்டர்பிரைசஸ்க்கு தணிக்கை தடை ஏதுமில்லை. ஆகையால் மேற்படி அன்னாருக்கு தொகை ரூ. 2,14,200/–யை வழங்கி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

வைப்பு தொகை பெறப்பட்டு மூன்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் மேற்படி தொகையினை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க. எண்.2232/ 2018/பி2

## பொருள் எண் – 2

இந்நகராட்சியின் சார்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடிதம் எண்.1593/2013/அ1, நாள்.02.04.2018ன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், செங்கல்பட்டு இருப்பு தாம்பரம் அலுவலகத்தில் கணினி சம்மந்தமாக Repairs/Spares/Service charges of 10 KVA UPS System பணி பார்க்கப்பட்டமைக்கு இந்நகராட்சியின் பங்களிப்பு தொகையாக ரூ.7080/- ஐ M/s Frontline Systems Service (P) Ltd பெயரில் காசோலையாக வழங்கிட தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிட மன்றப்பொருள் வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3689/2018/இ1

## பொருள் எண் – 3

பல்லவபுரம் நகராட்சி எல்லைகுட்பட்ட வார்டு எண் 18,22 மற்றும் 23 ல் கீழ்கண்ட தெருக்கள் வரிவசூல் கணணியில் விடுபட்டுள்ளது.இதனால் இப்பகுதியில் சொத்துவரி சரியான தெருக்களில்.பதிவு செய்ய முடியவில்லை, மேலும் சொத்துவரி,பாதாளகழிவுநீர் (ம)குடிநீர் ஆகிய வரிஇனங்களுக்கு கேட்பு வழங்கவும் முடியவில்லை எனவே கீழ்கண்ட தெருக்கள் இந்நகராட்சி சொத்துவரி மற்றும் காலிமனை வரி மண்டலம் பதிவேட்டில் பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | தெரு பெயர் | சொத்துவரி மண்டலம் | காலிமனை வரி மண்டலம் |
|---|---|---|---|
| | **வார்டு எண்22ல் சேர்க்க வேண்டிய தெரு** | | |

| | | | |
|---|---|---|---|
| 1 | காந்தி தெரு, மயிலரசு நகர் | **C** | **A** |
| 2 | முருகேச பிள்ளை தெரு ,மயிலரசு நகர் | **C** | **A** |
| 3 | வெங்கடப்பிள்ளை தெரு, மயிலரசு நகர் | **C** | **A** |
| 4 | நேரு தெரு, செந்தில் நகர் | **C** | **A** |
| 5 | திருவள்ளுவர் தெரு, செந்தில் நகர் | **C** | **A** |
| 6 | காமராஜ் தெரு ,செந்தில் நகர் | **C** | **A** |
| 7 | அருள் முருகன் ராமமுர்த்தி நகர் 1வது தெரு | **C** | **A** |
| 8 | அருள் முருகன் ராமமுர்த்தி நகர் 2வது தெரு | **C** | **A** |
| 9 | அருள் முருகன் ராமமுர்த்தி நகர் 1வது குறுக்கு தெரு | **C** | **A** |
| 10 | அருள் முருகன் ராமமுர்த்தி நகர் 2வது குறுக்கு தெரு | **C** | **A** |
| 11 | அருள் முருகன் ராமமுர்த்தி நகர் 3வது குறுக்கு தெரு | **C** | **A** |
| 12 | பாரதி தெரு, அருள் முருகன் ராமமூர்த்தி நகர் | **C** | **A** |
| 13 | வரத பிள்ளை தெரு அருள் முருகன் ராமமூர்த்தி நகர் | **C** | **A** |
| 14 | துரைபாக்கம் பல்லாவரம் ரேடியல் சாலை | **A** | **C** |
| | **வார்டு எண்23ல் சேர்க்க வேண்டிய தெரு** | | |
| 15 | துரைபாக்கம் பல்லாவரம் ரேடியல் சாலை | **A** | **C** |
| | **வார்டு 18ல் சேர்க்க வேண்டிய தெரு** | | |
| 16 | இங்கிலிஷ் எலக்டிரிக்கல் நகர் | **D** | **A** |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி அளிக்கலாம்

ந.க.எண்.375/2018/அ1

## பொருள் எண் – 4

பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 'ஏடிஸ்' கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும் வகையில், பள்ளி மாணவ, மாணவியருக்கு நிலவேம்பு குடிநீர் தொடர்ந்து 5 நாட்கள் வழங்கவும், இதனை 60 நாட்கள் இடைவெளியில் ஆண்டு முழுவதும் (2018–19) வழங்க, நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை –5 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 2571/2017/ஜே1, நாள் 23.04.2018ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நகராட்சியிலுள்ள 62 பள்ளிகள் மற்றும் 24 அங்கன்வாடி மையங்கள் ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ஜீன் – 2018ம் மாதம் தொடங்கி மார்ச் – 2019 வரை 5 தவணைகள் வழங்க செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி 2018–19ம் ஆண்டுக்கு 5 தவணைகள் வழங்க 1000 கிலோ நிலவேம்பு தேவைக்கேற்ப வாங்கிக்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் செலவிடவும் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் நிலவேம்பு குடிநீர் தொடர்ந்து வழங்க அரசு அறிவுறுத்துவதால் தேவையான நிலவேம்பு சூரணம் வாங்க அனுமதிக்கலாம்.

ந.க.எண் 3713/2017/எச்1

## பொருள் எண் – 5

பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.கருணாநிதி அவர்கள், பல்லவபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் அறை ஒதுக்கீடு செய்து தருமாறு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P.No.3861/2017ல் வழக்கு தொடரப்பட்டு வழக்கு 02.04.2018 அன்று நீதிமன்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டு வழக்கு முடிவுற்றது. இந்நகராட்சியின் சார்பாக திரு.P.ஸ்ரீநிவாஸ் அவர்கள் வழக்கை நடத்தியமைக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/-ஐ வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. இச்செலவீனம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2152/2016/இ1

## பொருள் எண் – 6

பல்லவபுரம் நகராட்சில் பணிகள் மேற்கொண்டதில் ஒப்பந்ததாரர் சபரி எலக்ட்ரிகல்ஸ் 2012 – 2013, 2013 – 2014, ஆண்டுகளுக்கான பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட PSD, தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை வைப்பு நிதி தொகையினை வழங்க மூன்றாண்டு காலத்திற்கு மேல் ஆகிவிட்டது. ஆகையால் மேற்படி அன்னாருக்கு தொகை ரூ.2,97,307/–யை வழங்க மன்றப்பொருள் வரைவு ஆணையரின் ஒப்புதலுக்காக.

**<u>அலுவலக குறிப்பு</u>**

வைப்பு தொகை பெறப்பட்டு மூன்றாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால் மேற்படி தொகையினை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2232/ 2018/பி2

## பொருள் எண் – 7

பல்லவபுரம் நகராட்சியில் **2018–19** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள **27.04.2018** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **பொது நிதி** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.21, மாணிக்கம் நகரில் தார் சாலை அமைக்கும் பணி | 9.00 | திரு.M.மாதவன் -0.03 % குறைவு<br><br>திருமதி.M.கௌரி +0.32 % அதிகம் | திரு.M.மாதவன் -0.03 % குறைவு |

**அலுவலக குறிப்பு**

1. மேற்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அவற்றின் எதிரே குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இச்செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க. எண்.1652/2017/இ1

## பொருள் எண் – 8

பல்லவபுரம் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் குடிநீர் விநியோகம் பொது சுகாதாரப்பணி மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு போன்ற பணிகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும், பணியாளர்களை உடனுக்குடன் தொடர்பு கொள்ளவும் ஏதுவாக தகவல் பரிமாற்றக் கருவிகள் (Walky Talky) கம்பியில்லா தொலைபேசி கருவிகள் இதுவரை மொத்தம் 100 எண்ணிக்கை பயன்பாட்டில் உள்ளது. அதில் 80 எண்ணிக்கையில் கருவிகளின் பயன்பாட்டு காலம் 06.01.2018ல் முடிவடைந்துள்ளது. எனவே பயன்பாட்டிலுள்ள கம்பியில்லா தொலைபேசிகளை இயக்கி, ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவதற்கு 07.01.2018 முதல் 06.01.2019 வரை ஒரு ஆண்டுக்கு நீட்டிப்பு செய்து 06.01.2017 அன்று M/s Arya Omnitalk Radio Trunking Services Pvt. Ltd, Chennai-29 வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் ரூ.10.00 இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s Arya Omnitalk Radio Trunking Services Pvt. Ltd, Chennai-29 நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.3132/2016/இ1

## பொருள் எண் – 9

பல்லவபுரம் நகராட்சி வார்டு எண் 15ல் கீழ்கட்டளை, ராஜேந்திரா நகரில் அமைந்துள்ள வீடற்றோர்கான தங்கும் விடுதி 01.06.2018 வெள்ளிக்கிழமை முதல் துவங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி இல்லத்தை ரெகோபாத் கல்வி அறக்கட்டளை மூலம் பராமரிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி இல்லத்தை தினசரி கண்காணிக்கவும், ஆலோசனைகள் வழங்கவும் கீழ்கண்ட மேலாண்மை குழு அமைக்கப்பட்டதை ஒப்புதல் அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | உதவி பொறியாளர் | பல்லவபுரம் நகராட்சி |
| 2 | சுகாதார ஆய்வாளர் | பல்லவபுரம் நகராட்சி |
| 3 | சமுதாய அமைப்பாளர் | பல்லவபுரம் நகராட்சி |
| 4 | திரு.மரியசூசை | ரெகோபாத் கல்வி அறக்கட்டளை |
| 5 | திரு.சார்லஸ் | ரெகோபாத் கல்வி அறக்கட்டளை |
| 6 | திரு.ராகேஷ் | கேர்டேக்கர் |
| 7 | திரு.எம்.கிருஷ்ணன் | கேர்டேக்கர் |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்டவாறு குழு அமைக்கப்பட்டதை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

ந.க.எண் 3381/2018/எச்1

## பொருள் எண்-10

பல்லவபுரம் நகராட்சி வார்டு எண் 15ல் கீழ்கட்டளை, ராஜேந்திரா நகரில் அமைந்துள்ள வீடற்றோர்கான தங்கும் விடுதி 01.06.2018 வெள்ளிக்கிழமை முதல் துவங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி இல்லத்தை ரெகோபாத் கல்வி அறக்கட்டளை மூலம் பராமரிப்பு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி இல்லத்தை நிர்வகிக்கவும் ஆலோசனைகள் வழங்கவும் கீழ்கண்ட நிர்வாக குழு அமைக்கப்பட்டதை ஒப்புதல் அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆணையர் | தலைவர் |
| 2 | காவல் ஆய்வாளர் | மடிப்பாக்கம் காவல் நிலையம் |
| 3 | மருத்துவ அலுவலர் | நகரநல சுகாதார நிலையம் II |
| 4 | நகராட்சி பொறியாளர் | பல்லவபுரம் நகராட்சி |
| 5 | சுகாதார அலுவலர் | பல்லவபுரம் நகராட்சி |
| 6 | திரு.மரியசூசை | ரெகோபாத் கல்வி அறக்கட்டளை |
| 7 | திரு.சார்லஸ் | ரெகோபாத் கல்வி அறக்கட்டளை |

**அலுவலக குறிப்பு**

மேற்கண்டவாறு குழு அமைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

ந.க.எண் 3381/2018/எச்1

## பொருள் எண்.-11

பல்லவபுரம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் 2018–19ல் வாங்கப்பட்ட TATA ACE மற்றும் Compactor Lorry வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனங்களக்கு Free Service செய்வதற்கும் வாகனங்கள் வாங்கப்பட்ட நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட Service Center ல் பணி மேற்கொள்வதற்கும், மற்றும் Free Serviceல் இல்லாத இதர பணிகள் / உதிரி பாகங்கள் மாற்ற வேண்டியுள்ளதால் கீழ்கண்ட நிறுவனத்திடம் Service செய்ய உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1. TATA ACE Authorished Service Center South India Motors
2. Ashok Leyland Authorished Service Center, LG Auto Works

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் /2018/எச்1

## பொருள் எண்-12

பல்லவபுரம் நகராட்சியில் 1970 முதல் இன்றைய தேதிவரை பிறப்பு மற்றும் இறப்பு என தனிதனி பதிவேடுகள் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. பழைய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளில் சான்றிதழ் தயார் செய்து வழங்கியது போக ஒரு சில ஆண்டுகள் கணிணியில் பதிவேற்றம் செய்யாமல் உள்ளது எனவும், ஆகவே விடுப்பட்ட பதிவுகளை கணிணியில் பதிவேற்றம் செய்யும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்

ந.க.எண் 4140/2018/எச்1

## பொருள் எண்.-13

பல்லவபுரம் நகராட்சி நகரநல வாழ்வு மருத்துவமனைகளில் பணிபுரியும் 8 பெண்பணியாளர்களுக்கு அரசாணை எண் 181, நாள் 17.08.2005, அரசாணை எண் 457, நாள் 31.01.2001ன் படியும் மற்றும் அரசாணை எண் 236, நாள் 01.06.2009ன் படி சீருடைப் படிகள் 2018–19ம் ஆண்டுக்க வழங்கப்பட வேண்டியுள்ளது. இப்பணியாளர்களுக்கு சீருடைப்படி வழங்க செலவினத் தொகை ரூ.8200/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியாளர்களின் பெயர்கள் | பதவி | தொகை |
|---|---|---|---|
| 1 | திருமதி.EGT.கீரிட்டா | செவிலியர் | 1200 |
| 2 | திருமதி.G.பத்மா | நகர சுகாதார | 1000 |

| | | | |
|---|---|---|---|
| | | செவிலியர் | |
| 3 | திருமதி.A.பத்மாவதி | " | 1000 |
| 4 | திருமதி.G.ராதிகா | " | 1000 |
| 5 | திருமதி.S.சரஸ்வதி | " | 1000 |
| 6 | திருமதி.K.R.வெங்கடரமணி தேவி | " | 1000 |
| 7 | திருமதி.R.காளியம்மாள் | " | 1000 |
| 8 | திருமதி.S.நிர்மலா | " | 1000 |

அலுவலக குறிப்பு

நகரநல வாழ்வு மையத்தில் பணிபுரியும் பெண் பணியாளர்களக்க அரசாணையின் படி 2018–19ம் ஆண்டிற்கு சீருடைப்படி வழங்க தகுதியுடையது. ஏனவே செலவினத் தொகை ரூ.8200/– வழங்க அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2643/2018/எச்1

## பொருள் எண்.14

பல்லவபுரம் நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பெறப்படும் குடிநீருக்காக 1000 லிட்டருக்கு தொகை ரூ4.50 வீதம் கணக்கீட்டு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தொகை வழங்கப்பட்டது. அரசாணை எண்.39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.17.04.2018ன்படி நகரமைப்பிற்கு 01.12.2017 முதல் 31.03.2018 வரை 1000 லிட்டருக்கு தொகை ரூ.9.00 மற்றும் 01.04.2018 முதல் 31.03.2018 வரை 1000 லிட்டருக்கு தொகை ரூ.9.45 என திருத்தி அமைக்கப்பட்ட தொகைக்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் திருத்தி அமைக்கப்பட்ட அரசாணையின் படி 01.12.2017 முதல் 31.05.2018 வரை குடிநீர் பெறப்பட்டமைக்கான தொகை ரூ.5065692/– னை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலுககுறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. குடிநீர் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.15

பல்லவபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு அகற்றும் TN 22 AA 2809 வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்க வேண்டி அதில் உள்ள பழுதுகளை சரி செய்து தர ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், கூடுதல் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பி அனுமதி பெறவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்       /2018/எச்1)

## பொருள் எண்.16

பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12ல் R.K.V. அவென்யூ பகுதியில் சில்வர் ஜீப்ளி பூங்காவில் அம்ருத் திட்டத்தின் கீழ் பூங்கா அமைக்கும் பணி முடிவுபெற்றது. இவற்றில் விடுபட்டுள்ள பணியான வண்ணம் அடித்தல் விளையாட்டு உபகரணங்கள் அமைத்தல் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.00 இலட்ட்த்திற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. பொது நிதி அல்லது OSR நிதியில் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 847/2017/இ1

## பொருள் எண்.17

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15ல் கீழ்க்கட்டளை பகுதியில் கங்கா கார்டன் தெருவில் நகர்ப்புற வசிப்பிட மற்றோர் ஆதரவற்றோர்களுக்கு, இல்லம் அமைக்கப்பட்டு இப்பணி நடைமுறைக்கு வரப்பெற்றன. இவ்விடத்தில் கட்டிடத்திக்கு குறுக்கே கால்வாய் இருப்பதினால், இவற்றினை தாண்டி உரிய கட்டிடத்திற்க்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே அவசர அவசியம் கருதி உரிய இடத்திற்க்கு சிறுபாலமும் கால்வாய் கட்டுதல் பணி மேற்கொள்ள ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதிப்பெற்று நிர்வாக அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதிப்பெற்று, பொது நிதி கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 5859/2014/இ1.

## பொருள் எண்.18

பல்லவபுரம் பெரு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆண்டு பராமரிப்புக் கென கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்சமயம் கோடை காலமாக இருப்பதினாலும் குடிநீர் பணி என்பதினால் அவர அவசியம் கருதி கீழ்க்கண்ட பணிகள் தோய்வில்லாமல் மேற்கொள்ள உரிய பணிகளுக்கு ஏற்கனவோ ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களை கொண்டு அதே விலை விகிதத்தில் ஒரு ஆண்டுக்கு கால நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) லட்சத்தில். |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைந்துள்ள டீசல் ஜெனரேட்டர் ஆண்டு பராமரிப்பு பணி. | ரூ.7.80/- |
| 2 | நகராட்சிக்கு சொந்தமான பாதாள கழிவு நீர் உந்து நிலையங்களில் உள்ள டீசல் ஜெனரேட்டர் ஆண்டு பராமரிப்பு பணி. | ரூ.9.00/- |
| 3 | இந்நகராட்சிக்கு சொந்தமான பாதாள கழிவுநீர் உந்து நிலையங்களில் உள்ள மின்மாற்றி ஆண்டு பராமரிப்பு பணி . | ரூ.9.00/- |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்காலம்.
2. குடிநீர் நிதியின் கீழ் செலவீனம் மேற்கெள்ளலாம் மற்றும் ஏற்கனவே வழங்கிய ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் அதே விலை விகிதத்தில் உரிய ஒப்பந்ததாரர்களை கொண்டு ஒரு ஆண்டுக்கு கால நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2156/2017/இ1

## பொருள் எண்.19

இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பொது பிரிவு, வருவாய் பிரிவு, மற்றும் பொறியியல் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கணினிக்ளுக்கு 10 KVA, 5 KVA, மற்றும் 3KVA Online UPS அமைத்திட தோராய செலவினம் ரூ.9.60 இலட்சத்திற்க்கு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1652/2017/இ1**

## பொருள் எண்.20

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12ல் R.K.V.சில்வா ஜீப்லி, வார்டு எண்.15ல் காசி விசாலட்சிபுரம் மற்றும் வார்டு எண்.13ல் சுபம் நகர் வார்டு எண்.17ல் பவானி நகர் ஆகிய விளையாட்டு பூங்காக்கள் AMRUT திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்க்கு வரப்பெற்றுள்ளன. இப்பூங்காக்களை பராமரிக்க போதிய பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள கீழ் கண்வாறு பூங்காக்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | வார்டு எண்.15ல் காசி விசாலட்சிபுரம், வார்டு எண்.12 R.K.V. அவென்யூ சில்வர் ஜீப்லி பூங்காக்கள் | ரூ.9.80 இலட்சம் |

| | | |
|---|---|---|
| | பராமரிப்பு | |
| 2 | கூர்டு எண்.13 சுபம் நகர் Part III (ம) வார்டு எண்.17 பவானி நகர் பூங்காக்கள் பராமரிப்பு | ரூ.9.80 இலட்சம் |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. OSR நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.847/2017/இ1.**

## பொருள் எண்.21

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கட்டளை பகுதியில் அமைந்துள்ள பிருந்தாவன் நகர் குடியிருப்போர் நலசங்கம் சார்பில் கீழ்கண்டவாறு உள்ள தெருக்களை வார்டு எண்.14.ல் சொத்துவரி விதிக்கும் பொருட்டு கணினியில் சேர்த்திட மனு அளித்ததின் பேரில்,மேற்படி கீழ் க.ண்டுள்ளவாறு உள்ள தெருக்களை கணினியில் சொத்துவரி “C” மண்டலத்தில் சேர்க்கவும், காலிமனைவரி “A” மண்டலத்தில் சேர்க்கவும், சம்மந்தப்பட்ட வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வரும் மேற்படி மண்டலங்களை ஊர்ஜிதம் செய்து வருவாய் அலுவலரின் சான்றொப்பம் பெற்று அறிக்கை சமர்பித்துள்ளதால், மேற்படி, தெருக்களை கீழ்கண்டவாறு உள்ள மண்டலத்தில் சேர்த்திட தனிஅலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | கணினியில் சேர்க்க வேண்டிய தெருக்களின் பெயர்கள் | சொத்துவரி மண்டலம் | காலிமனைவரி மண்டலம் |
|---|---|---|---|
| 1 | சுமூக விநாயகர் தெரு–பிருந்தாவன்நகர் | C | A |
| 2 | பாலாஜி அவின்யு –பிருந்தாவன்நகர் | C | A |
| 3 | அமுதவிநாயகர் தெரு –பிருந்தாவன்நகர் | C | A |
| 4 | அன்னைதெரு –பிருந்தாவன்நகர் | C | A |
| 5 | மல்லிகை தெரு –பிருந்தாவன்நகர் | C | A |
| 6 | மாடன் அவின்யு –பிருந்தாவன்நகர் | C | A |

(ந.க.எண்.4353/2018/அ1)

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் எண்.22

பல்லவபுரம் நகராட்சியில் தினசரி நாள் ஒன்றுக்கு 104 மெட்ரிக் டன் அளவில் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு வேங்கடமங்கலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் குப்பைகளை அவரவர் பகுதிகளில் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பையென தரம் பிரித்து பொதுமக்களிடமிருந்து பெற்று பெறப்படும் பகுதிகளிலே உரமாக்கும் வகையில் வசதிகள் அளிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி நகராட்சியில் பெறப்படும் குப்பையில் 52 டன் மக்கும் குப்பைகளை பசுமை உரக்குடில், உபயோகமற்ற கழிப்பிட கட்டிட பகுதி, நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடிக்கும் தொட்டி, தகன எரிவாயு மேடை, பாதாள சாக்கடை கழிவு நீரேற்று நிலையம் மற்றும் சாலையின் ஒரப்பகுதி, பி.வி.சி டேங்க் பேரல் முறையிலும் மற்றும் அதற்கு தேவையான வாகனங்களுடன் மொத்தம் 52 டன் மக்கும் குப்பையை உரமாக மாற்றுவதற்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.75,

நாள்.15.05.2018ல் அனுமதிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது இப்பணி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றுள்ளதை கருதி திருத்தியவாறு கீழ்கண்ட இடங்களில் மாற்றி அமைக்கலாம்.

| வ.எண் | பகுதி | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| **பொது நிதி அல்லது தூய்மை இந்தியா திட்டம் (SBM)** | | |
| 1 | வார்டு எண்.15, கீழ்கட்டளை கழிவுநீர் அகற்றும் நிலையத்தில் 5 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை உரமாக்கிட பசுமை உரக்குடில் அமைத்தல் பணி | 40.00 |
| 2 | வார்டு எண்.20, திரு.வி.க நகர் மயான வளாகத்தில் 5 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை உரமாக்கிட பசுமை உரக்குடில் அமைத்தல் பணி | 40.00 |
| 3 | வார்டு எண்.19, மணிகண்டன் நகர் பூங்கா அருகில் 5 மெட்ரிக் டன் பசுமை உரக்குடில் அமைத்தல் | 40.00 |
| 4 | வார்டு எண்.16 ரங்கசாமி தெரு விரிவாக்கம் பகுதியில் 5 மெட்ரிக் டன் பசுமை உரக்குடில் அமைத்தல் | 40.00 |
| 5 | வார்டு எண்.15, கங்கா கார்டன் தெரு (ம) துறைக்கண்ணு சாலையில் 5 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை உரமாக்கிட பசுமை உரக்குடில் அமைத்தல் பணி | 40.00 |
| 6 | வார்டு எண்.11, கச்சேரி மலையில் 5 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகளை உரமாக்கிட பசுமை உரக்குடில் அமைத்தல் பணி | 40.00 |
| 7 | முதன்மை குப்பை சேகரிப்பு வாகனம் (TATA ACE) 40 எண்ணிக்கை வாங்குதல் (6.50 L/Each) | 260.00 |
| 8 | முதன்மை குப்பை சேகரிப்பு வாகனம் (Battery Operated Vehicle) 20 எண்ணிக்கை வாங்குதல் (1.75 L/Each) | 35.00 |
| 9 | வாகனத்தில் பொறுத்துவதற்கு குப்பை அரவை இயந்திரம் (Organic Shredder Machine) 2 எண்ணிக்கை வாங்குதல் | 3.20 |
| | **மொத்தம்** | **538.20** |

மேற்படி வரிசை எண்.1, 3, 4 மற்றும் 5 பணிக்கு மட்டும் மாற்றியமைக்கும் பணி இடங்களில் அதே ஒப்பந்தாரரை கொண்டு அதே ஒப்பந்தவிலைவிகிதத்தில் பணியினை மேற்கொள்ளவும் புதியதாக வரிசை எண்.6ல் கண்ட பணியினை தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகளை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. ரூ.538.20 இலட்சத்திற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இத்திட்டத்திற்குரிய செலவினத் தொகையை பொது நிதியிலோ அல்லது தூய்மை இந்தியா திட்டத்தின் மூலமாகவோ பணிகள் மேற்கொள்ளலாம்.

ந.க.எண்.1621/2018/இ1